இணைப்பு IV

(46 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண். 61

மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

கொள்கை விளக்கக் குறிப்பு.

மானியக் கோரிக்கை எண். 61-ல், மாநில அரசு, பல்வேறு நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கும் கடன்கள், முன்பணம் ஆகியவை குறித்த நிதியொதுக்கங்கள் அடங்கும். பல்வேறு துறைகளின் வருவாய்க் கணக்கில் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை அளிக்கும்போது, பல்வேறு துறைகளுக்காக நிதி வழங்குவதற்குப் பின்புலமாக அமைந்துள்ள பொதுவான கொள்கை விளக்கப்பட்டுள்ளது. இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள முக்கிய நிதி ஒதுக்கங்கள் பற்றி மட்டுமே இக்குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன; பல்வேறு துறைகளின் நடவடிக்கைகள் குறித்த முழு விவரத்தை அளிக்கும்போது, இக்குறிப்பில் எடுத்துக் காட்டப்பட்ட முக்கிய நிதி ஒதுக்கங்கள் அவ்வத் துறைகளில் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. துறை வாரியான தனித்தனி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	வளர்ச்சித்துறை.	1994-95 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.	1994-95 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு.	1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.
	(1)	(2)	(3)	(4)
				(ரூபாய் இலட்சத்தில்)
1.	பயிர் வளர்ப்பு, மண், நீர்வளப் பாதுகாப்பு, வேளாண்மை நிதியுதவி நிறுவனங்கள், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்	3201.22	3441.67	3217.48
2.	கால்நடை வளர்ப்பு	15.00	15.00	0.01
3.	மலைப்பகுதி மேம்பாடு	274.79	394.46	465.01

(1)	(2)	(3)	(4)
4. கூட்டுறவு	30.07	105.07	30.06
5. தொழில்கள்	2535.08	2695.54	1492.84
6. வீட்டுவசதி	2994.71	3250.06	3300.95
7. நகர்ப்பகுதி வளர்ச்சி	4520.04	4675.03	4808.04
8. மின்சக்தி	21300.00	21520.00	33500.00
9. மருத்துவம், பொதுச் சுகாதாரம்	7.75	7.75	7.75
10. குடிநீ வழங்கல்-துப்புரவு	17174.33	8690.82	20274.17
11. பொதுக் கல்வி, விளையாட்டு, கலை, பண்பாடு	0.07	4.21	25.07
12. ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்	151.11	151.11	151.13
13. சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த கடன்கள் (இலங்கை மற்றும் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கான புதுவாழ்வுத் திட்டங்கள் முதலியவை போன்றவை	176.36	116.36	116.36
14. ஏனைய போக்குவரத்துப் பணிகளுக்கான கடன்கள் (சாலைகளும் பாலங்களும்)	1,00.01	1,00.01	1,00.01
15. சாலைப் போக்குவரத்து	0.33	2300.27	0.32
16. அரசுப் பணியாளர்கள் முதலியோருக்குக் கடன்கள்	7182.77	8185.25	9412.75
17. ஏனைய கடன்கள்	68.98	94.17	58.96
மொத்தம்:	599732.62	55746.78	76960.91

மின்சக்தி

2. 1995–96 ஆம் ஆண்டிற்கான இந்த மானியக் கோரிக்கையில் முக்கியமான முதலீடு, தமிழ்நாடு மின்சகதி நிதியுதவி அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக மின்வாரியத்தின் மின்சக்தித் திட்டங்களுக்கு, நிதியுதவி அளிப்பது ஆகும். இந்நோக்கத்திற்காக ரூ. 300 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிச் சந்தைக் கடன்களுக்குப் பதிலாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ. 35 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

1995 மே 5]

குடிநீர் வழங்கல்-துப்புரவு

3. குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டங்களுக்காக *1995–96* ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. *202.74* கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கிய நிதியொதுக்கங்கள் வருமாறு:

1995–96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் இலட்சத்தில்)

1.	தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் செயற்படுத்தும் திட்டங்கள்:		
	(i) குடிநீர் வழங்கு திட்டங்கள்	2677.71	28,69.27
	(ii) வடிகால் திட்டங்கள்	191.56	
2.	சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்:		
	(i) குடிநீர் வழங்கு திட்டங்கள்	14904.90	17404.90
	(ii) கழிவு நீரகற்று திட்டங்கள்	2500.00	
	மொத்தம் 1+2		20274.17

4. குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்று திட்டங்களை நிறைவேற்றுவதில் பெருமளவு மூலதன முதலீடுகள் செய்ய வேண்டியுள்ளது. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, அரசு வழங்கும் வரவு-செலவுத் திட்ட நிதி ஆதாரங்களுடன், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தின் மூலம் செயற்படுததப்படும் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் நிதியுதவி பெறப்படுகிறது.

5. எஞ்சிய செலவிற்கு, உள்ளாட்சி மன்றங்கள், அவற்றின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து வகை செய்யப்பட்டுவதற்கு மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் அல்லது மாநில அரசு அதனை மானியம் அல்லது கடனாக வழங்க வேண்டும்.

6. குறைந்த அளவு தேவைகள் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட கிராமக் குடிநீர் வழங்கல் திட்டம், உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்படும் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம் (தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம்) ஆகியவை தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் நிறைவேற்றி வரும் சில முக்கியத் திட்டங்களாகும்.

[1995 மே 5

7. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம், அரசிடமிருந்து கடன்கள் பெற்று பல்வேறு பெருந் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த வாரியம் நிறைவேற்றிவரும் சில முக்கிய திட்டங்களில், சென்னைக் குடிநீர் அனுப்புகை-விநியோகத் திட்டம் கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டம், உலக வங்கித் திட்டம் (சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம்) ஆகியவை அடங்கும். இத்திட்டங்களுக்கு, வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியத்திற்குக் கடனாக ரூ. 119 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்கள்.

8. மானியக் கோரிக்கையில் தொழில் துறைக்கு மொத்தம் ரூ. 14.93 கோடி கடன் கணக்குகள் ஒதுக்கீடாக சேர்க்கப்பட்டுள்ளது. இத்துறையில் செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகள் வருமாறு:

(i) மூலதனத்திற்குப் பதிலாக மாற்றத் தக்கத் கடனாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு ரூ. 7 கோடி.

(ii) மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன்கள் வழங்க ரூ. 30 இலட்சம்.

(iii) பொது மக்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் கடன் பெறுவதற்குப் பதிலாக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு ரூபாய் 3.30 கோடி கடன் வழங்குதல்.

வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி.

9. வீட்டுவசதி-நகர்ப்பகுதி வளர்ச்சிக்கான கடனாக 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 81.09 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் அரசுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ. 10 கோடி நிதியொதுக்கீடும், குறைந்த வருமானப் பிரிவினருக்குரிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1 கோடி ஒதுக்கீடும், நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட வாரியத்திற்குக் கடனாக ரூ. 2 கோடியும், தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நில மேம்பாடு, குடிசைப் பகுதி மேம்பாடுத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக ரூ. 23 கோடியும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு

1995 மே 5]

வசதிச் சங்கங்களுக்கு ரூ. 14.45 கோடியும், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நகராட்சி வளர்ச்சி நிதிக்கு ரூ. 20 கோடியும் இதில் அடங்கும்.

அரசுப் பணியாளர்களும், ஏனைய பணியாளர்களும்.

10. அரசுப் பணியாளர்களுக்கான பல்வேறு வகைப்பட்ட முன் பணங்களை வழங்குவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 94.13 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு முன்பணம் வழங்குவதற்காக நிதியொதிக்கீட்டில் பெரும்பகுதி அதாவது ரூ. 50.20 கோடியும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு முன்பணம் வழங்குவதற்கான ரூ. 150 கோடியும் இதில் அடங்கும். மேலும் காவல் துறைப் பணியாளர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக கடனாக ரூ. 1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. அரசு மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் ஆகியோருக்குப் பல்வேறு வகைப்பட்ட முன்பணங்களை வழங்குவதற்காக ரூ. 8.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிப் பணியாளர்கள் வீடுகள் கட்டுவதற்கு முன்பணம் அனுமதிப்பதற்காகவும், 1995-96 ஆம் ஆணடு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 50 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. அரசுப் பணியாளர்கள் கணினிகள் வாங்குவதற்கு முன்பணம் வழங்க, ரூ. 25 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

13. அரசுப் பணியாளர்களுக்கு, அரசு மோட்டார் வண்டிகள் வழங்குவதற்குப் பதிலாக, மோட்டார் வண்டிகள் வாங்க முன்பணம் வழங்குவதற்கு, ரூ. 1 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கடன்களைத் திருப்பி வசூலித்தல்

14. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்டு, 1995-96 ஆம் ஆண்டில் வசூலாகும் தொகை, ரூ. 1,18,36.19 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

15. முக்கியமான நிதியொதுக்கீடுகள் குறித்த பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு

(செலவினங்கள்)

	1995-96 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)
1. வேளாண்மை :	
மண், நீர் வளப் பாதுகாப்பு.	427.50
II தொழில்கள் :	
மாவட்டத் தொழில் மையங்கள் (தொடக்க உதவித் தொகை வழங்குவது உட்பட)	30.01
தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்	700.00
III. வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சி :	
தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டுவசதித் திட்டங்கள்	1000.00
குறைந்த வருமானப் பிரிவினர் வீட்டுவசதித் திட்டம்	100.00
தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிலப்பகுதி மேம்பாடும் குடிசைப் பகுதி மேம்பாடும்	2300.00
தமிழ்நாடு நகராட்சி வளர்ச்சி நிதிக்குக் கடன்கள்	2000.00
தமிழ்நாடு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட வாரியத்திற்குக் கடன்கள்	200.00
IV. மின் சக்தி :	
தமிழ்நாடு மின்சக்தி நிதி அடிப்படை வசதிக் கழகத்திற்குக் கடன்கள்	30000.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 மே 5]

V. ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்:	
தொழிற்கல்வி, பட்டப்படிப்பு பயில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கடன்கள்	*87.35*
VI. புது வாழ்வுத் திட்டங்கள்:	
இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வீட்டுவசதிக் கடன்கள்	*100.00*
VII. உள்ளாட்சி மன்றங்கள் (குடிநீர் வழங்கல்-வடிகால் திட்டங்கள் தவிர)	
நகராட்சிகள் :	
நகராட்சி சாலைகள்	*50.00*
சாலைகள், பாலங்கள் அமைத்தல்	*50.00*
VIII. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள்:	
தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிக்குக் கடன்கள்	*230.00*
வேளாண்மை இடுபொருட்களை வாங்கி, வழங்க கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள்	*2000.00*
IX. அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள்:	
வீடுகள் கட்டுவதற்கு அரசுப் பணியாளர்களுக்குக் கடன்கள்	*5020.00*
மோட்டார் வண்டிகள் வாங்குவதற்கான கடன்கள்	*1560.00*
ஏனைய போக்குவரத்து வாகனங்கள் வாங்குவதற்கான முன்பணங்கள்	*125.00*
அரசுப் பணியாளர்களுக்கு அரசு மோட்டார் வண்டிகள் வழங்குவதற்குப் பதிலாக, மோட்டார் வண்டிகள் வாங்குவதற்கு முன்பணங்கள்	*100.00*

[1995 மே

கைத்தறித் துணிகள் வாங்குவதற்கு அரசுப் பணியாளர்களுக்கு முன்பணங்கள்	[illegible]
கதர்த் துணிகள் வாங்குவதற்கு அரசுப் பணியாளர்களுக்கு முன்பணங்கள்	450.00
திருமண முன்பணம்	50.00
கல்லூரி / பல்தொழிற் பயிலகங்களில் மேற்படிப்பு பயிலுவதற்கான கடன்கள்	320.00

X. ஏனைய கடன்கள்:

நகராட்சிப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்ட முன்பணம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS